## சேமிப்பு வங்கிகள்

மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதையும் தேசிய சேமிப்பு மட்டத்தை உயர்த்துவதையும் பிரதானமான நோக்கமாகக் கொண்டதே இவ் வங்கியாகும்.

தேசிய சேமிப்பு வங்கி சாதாரண சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு, நிறுவனங்களுக்கான 'திலிணபத்' கணக்கு போன்ற பல்வேறு வைப்புக்களை நடைமுறைப்படுத்திச் செல்கின்றது. சிறு பணத்தொகையுடன் கணக்கை ஆரம்பிக்கக் கூடியதாக இருப்பதும் தமது பணத்திற்கு அரசின் பூரண பாதுகாப்புக் கிடைப்பதும் உயர் வட்டி வருமானம் கிடைப்பதும் இவ்வங்கி மூலம் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற அனுகூலங்களுள் சிலவாகும்.

## அபிவிருத்தி வங்கிகள்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான முதலீட்டாளர்களுக்கான கடன் நிதியினை வழங்குவதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே இவ்வங்கியாகும். இதற்காக எமது நாட்டில் தேசிய அபிவிருத்தி வங்கியானது தொழிற்படுகின்றது.
இதன் மூலம் உற்பத்தி, கைத்தொழில், நிர்மாணம், உல்லாசப் பிரயாணம் போன்ற சேவைகளில் ஈடுபட்டுள்ள வணிகர்களுக்கு நீண்டகால கடன்களை வழங்குகின்றன. மேலும் சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கும் விசேட கடன் திட்ட முறைகளை மேற்கொள்கின்றது.


**உதாரணம்**

தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

அவ்வாறே பல்வேறு மாகாணங்களில் பிரதேசரீதியாக நிறுவப்பட்டுள்ள அபிவிருத்தி வங்கிகளும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளாகச் செயற்படுகின்றன.

## வைப்புக்களை ஏற்காத நிறுவனங்கள்

இந்நிறுவனங்கள் வணிகர்களுக்கு ஆலோசனைச் சேவைகள், குத்தகை வசதிகள், நிதி வசதிகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுக்க பிரதானமாக உதவி செய்கின்றன. இலங்கையில் செயற்படுகின்ற இவ்வாறான நிறுவனங்களை பின்வரும் பாய்ச்சற் கோட்டுப் படம் மூலம் அறியலாம்.




பாய்ச்சல் கோட்டு வரைபடம் : வைப்புக்களை ஏற்காத நிறுவனங்கள்

## வியாபார வங்கிகள்

வணிகமொன்றை ஆரம்பித்து நடாத்திக் கொண்டு செல்லும்போது வியாபாரிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். அவ்வாறான பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள வங்கி வியாபார வங்கி என அழைக்கப்படும். இந்நிறுவனமானது முகாமைத்துவச் சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதில் விஷேட கவனம் செலுத்துகின்றது. இலங்கையில் இவ்வாறான வங்கிகள் சில நடைமுறையில் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. உதாரணமாக

- வரையறுக்கப்பட்ட மக்கள் வியாபார வங்கி - இது மக்கள் வங்கியின் துணைக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- வரையறுக்கப்பட்ட இலங்கை வியாபார வங்கி - இது இலங்கை வங்கியின் துணைக் கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வியாபார வங்கிகள் வணிகர்களுக்கு அதிகமான சேவைகளை வழங்குகின்றன அவைகளுள் பின்வரும் சேவைகள் முக்கியமானவை.

- வணிகர்களிடமுள்ள பணத்தை பாதுகாப்பாகவும் மிகவும் இலாபம் தரக் கூடிய வழிமுறைகளில் முதலீடு செய்வதற்கான உரிய ஆலோசனைச் சேவைகளை வழங்குகின்றன.
- முதலீட்டு அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளை வழங்கல் உதாரணமாக வணிகத்தை பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கல், வணிகத்தை மறுசீரமைப்புச் செய்தல் தொடர்பான உரிய ஆலோசனைகள் வழங்கல், வணிகங்களை கூட்டிணைத்தல், கைப்பற்றுதல் தொடர் பான ஆலோசனைச் சேவைகள் வழங்கல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

- வணிகர்களுக்குக் குத்தகைச் சேவைகளை வழங்கல்
- நிதி ஆலோசனைச் சேவைகளை வழங்கல் உதாரணமாக வணிகர்களுக்கு மிக இலாபகரமான வழிகளில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், வங்கிப் பிணைகளை வழங்குதல்.
- வணிகத் திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்தல். வணிகர்கள் யாதேனுமொரு முதலீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும்பொழுது அவற்றின் பயன்பாட்டுத் தன்மையைப் பற்றி அறிக்கை வழங்கல், வணிகமொன்றை ஆரம்பிக்கும்பொழுது அவற்றை முறையாக மேற்கொள்ளத் தேவையான வணிகத் திட்டங்களைத் தயாரித்தல் போன்றன வியாபார வங்கிகள் மூலம் வழங்கப்படும் சேவைகளாகும்.

## குத்தகைக் கம்பனிகள் (Leasing Companies)

சொத்துக்களை குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யும்பொழுது அவற்றுக்குத் தேவையான நிதி வசதிகளை வழங்கும் நிதி நிறுவனங்களைக் குத்தகைக் கம்பனிகள் எனக் குறிப்பிடலாம். வணிக வங்கிகள், வியாபார வங்கிகள், அதிகாரம் பெற்ற நிதி நிறுவனங்கள் என்பன மூலமும் இச்சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என இதற்கு முன் கலந்தாலோசனை செய்தோம்.

குத்தகைக் கம்பனிகளுக்கு உதாரணங்கள் வருமாறு

- வரையறுத்த ஓரெக்ஸ் லீசிங் கம்பனி
- வரையறுத்த மேக்கன்டைல் லீசிங் கம்பனி
- வரையறுத்த கொமர்ஷியல் லீசிங் கம்பனி

## பணத்தரகர் நிறுவனங்கள் ( Money Brokers Institutions)

பணத்தைக் கடனுக்கு வழங்கக்கூடிய தரப்பினரையும், பணத்தை கடனுக்குப் பெறுவதற்குத் தேவையான தரப்பினரையும் அறிமுகப்படுத்தி அந்நிதித் தேவைகளைப் பூரத்தி செய்வதற்கு உதவும் நிறுவனமே இந்நிறுவனமாகும். இந்நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைக்காக இரு தரப்பினரிடமிருந்தும் கட்டணமொன்று அறவிடப்படும்.

பணத்தரகு நிறுவனங்களுக்ககு உதாரணங்கள் வருமாறு

- கீல்ஸ் டி. என்ட். ஆர் லிமிட்டட்
- எல்.எம்.ஜி. பொரெக்ஸ் லிமிட்டட்
- போபர்ஸ் மணி புரோக்கர்ஸ் லிமிட்டட்

செயற்பாடு 03

இலங்கையில் வணிக வங்கியல்லாத நிதி நிறுவனங்களை வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றுக்குமாக உதாரணங்களைக் குறிப்பிட்டு, அவைகள் மூலம் வணிகர்களுக்கு வழங்கப்படும் சேவைகளைக் குறிப்பிட்டு சுவர்ப் பத்திரிகையென்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துக.

## 3.2 காப்புறுதிச் சேவை (Insurance)

அபாயங்கள் வணிகர்களுக்கு மட்டுமின்றி எல்லாத் தரப்பினராலும் முகம் கொடுக்கக் கூடிய பிரச்சினையாகும். எவ்வனர்த்தம், எச்சந்தர்ப்பத்தில், எந்நேரத்தில் நடைபெறும் எனக் கூற முடியாது. தீ, காற்று, வெள்ளம், சுனாமி, பூமியதிர்ச்சி, திடீர் விபத்துக்கள், கலவரங்கள் போன்றவற்றின் மூலம் ஏற்படும் அபாயங்கள் பலவாக காணப்படுகின்றன. இவ்வபாயங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு அறிவுமட்டும் இருந்தால் போதாது. இதற்கு முறையான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அபாயங்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்ட வழிமுறையாக காப்புறுதி காணப்படுகின்றது. காப்புறுதியின் அடிப்படையாக இருப்பது இடர்களை ஒன்றுபடுத்துவதாகும். அவ்வாறாயின் பல்வேறு அபாயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என எதிர்பார்த்திருப்பவர்கள் மூலம் திரட்டிய நிதியைக் கொண்டு அபாயங்களுக்குட்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும். எனவே ஒரு நபரோ அல்லது பலரோ பொறுப்பேற்க வேண்டிய நட்டத்தை அதிகமான பிரிவினருக்கிடையே பகிர்ந்து கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளதே காப்புறுதியாகும்.

### காப்புறுதியும் ஆயுளுறுதியும்

கட்டடங்கள் , இயந்திராதிகள், மோட்டார் வாகனங்கள் போன்ற சொத்துக்களுக்கு ஏற்படும் நட்டங்களை ஈடு செய்வதற்காக மேற்கொள்ளப்படுவது காப்புறுதியாகும்.

ஒருவரின் உயிர் இழப்பிற்கு அல்லது உடல் தொடர்பாக ஏற்படக் கூடிய இயலாமைக்கு நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்வது ஆயுளுறுதியாகும்.

## காப்புறுதிக்கும் ஆயுளுறுதிக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்

| காப்புறுதி | ஆயுளுறுதி |
|---|---|
| நட்டம் நிகழும் என உறுதியாகக் கூற முடியாது. | நட்டம் நிச்சயமாக நிகழும். |
| காப்புறுதி ஒப்பந்தப் பெறுமானம் சொத்துக்களின் பெறுமானங்களுக்கேற்ப தீர்மானிக்கப்படும். | காப்புறுதி ஒப்பந்தத்தின் பெறுமானம் காப்புறுதி பெறுபவரின் விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். |
| காப்புறுதி ஒப்பந்தத்தை சாட்டுதல் செய்ய முடியும். | காப்புறுதி ஒப்பந்தத்தை சாட்டுதல் செய்ய முடியாது. |
| காப்புறுதி செய்யப்படும் சொத்துக்களுக்கு நட்டம் ஏற்பட்டால் மட்டுமே நட்ட ஈடு வழங்கப்படும். | உயிருக்கு இழப்பு ஏற்பட்டால் இழப்புத் தொகையும் இழப்பு ஏற்படாதுவிடின் முதிர்வுத் தொகையையும் பெற முடியும். |
| மேலதிக இலாபங்கள் கிடைப்பதில்லை. | காப்புறுதித் தொகைக்கு மேலதிகமாகப் பங்குலாபம், வட்டி என்பன வழங்கப்படும். |

## வணிக நடவடிக்கைகளுக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் காப்புறுதியின் முக்கியத்துவம்

பல்வேறு தன்மைகளில் வணிகங்களுக்குத் தமது நட்டத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்காக காப்புறுதிச் சேவையின் மூலம் வழங்கப்படும் முக்கியமான தொழிற்பாடுகளைப் பின்வரும் விடயங்கள் மூலம் விபரிக்க முடியும்.

### வணிக நடவடிக்கைகளின் அபிவிருத்தி

வணிகங்களுக்கு எதிர்பாராத இழப்புக்களின் காரணமாக அதிக சேதங்கள் ஏற்படுமாயின் அதனை தனி ஒருவரால் ஈடு செய்ய முடியாது. ஆயினும் காப்புறுதியின் மூலம் அந்நட்டத்தினை ஒருமைப்பாட்டுடன் ஈடுசெய்து கொள்வதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதன்காரணமாக வணிகர்கள் வணிகங்களை ஆரம்பித்து நடத்திச் செல்வதற்குப் பின்நிற்காது முன்வருகின்றனர். காப்புறுதி முறையொன்று இல்லாதிருப்பின் இடருறும் வணிகங்களை ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். இதனாலேதான் வணிகங்களை ஆரம்பிப்பதற்கும், அதனை நடத்திச் செல்வதற்கும் காப்புறுதி அவசியமாகின்றது.

## பொருளாதார அபிவிருத்தி

காப்புறுதி நிறுவனம் தவணை அடிப்படையில் சேகரிக்கப்படும் பணத்தினை பல்வேறு முதலீட்டு வழிகளில் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுத்துகின்றது. மேலும் இடர், அச்சம் குறைக்கப்படுவதால் அதிக முதலீடுகள் நாட்டில் உருவாகும். எனவே நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இக்காப்புறுதி காரணமாக அமைகின்றது.

## பல்வேறு தொழில் வாய்ப்புகள் உருவாகுதல்

காப்புறுதி நிறுவனங்கள் தோன்றியதன் காரணமாக பல்வேறு தொழில் சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன. உதாரணமாக காப்புறுதி முகவர்கள், காப்புறுதி நிறுவனங்களில் சேவை செய்யும் பல்வேறு தொழிலாளர் குழுக்கள் போன்ற தொழில் சந்தர்ப்பங்களைக் காண முடிகிறது. புதிய தொழில் சந்தர்ப்பங்களை உருவாக்குவதால் நாட்டின் அபிவிருத்திக்கு காப்புறுதி துணை புரிகிறது.

## சர்வதேச வணிக வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருத்தல்

சர்வதேச வணிக வளர்ச்சிக்கு காப்புறுதியின் பங்களிப்பு பேருதவியாக இருக்கின்றது. சர்வதேச வணிக நடவடிக்கைகளின் போது ஏற்படக் கூடிய நட்டங்கள் பரவலானது. உதாரணமாக கடல், ஆகாயப் போக்குவரத்து நடவடிக்கைகளின்போது பிரயாணிகளுக்கும், பொருட்களுக்கும் அதிகமான சேதங்களும் நட்டங்களும் ஏற்பட முடியும். இவ்விடர்கள் காப்புறுதியின் மூலம் நீக்கப்படுகின்றது. காப்புறுதி இல்லாதிருப்பின் சர்வதேச வணிகமும் இல்லாதிருக்கும் எனக் குறிப்பிடுமளவிற்குச் சர்வதேச வணிகத்திற்குக் காப்புறுதி ஊக்கமளிக்கிறது.

## ஊழியர்களினதும், நுகர்வாளர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்தல்

வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்லும்போது, அவற்றுடன் தொடர்புடைய ஊழியர்களுக்கு யாதேனும் ஒரு இடருக்கு முகங்கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட இடமுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது முகங்கொடுக்கக் கூடிய சேதங்களிலிருந்து ஈடு செய்து கொள்வதற்காக பல்வேறு முறைகளிலான காப்புறுதி ஒப்பந்தங்கள் மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாக ஊழியர்களது பொறுப்புக் காப்புறுதியைக் கூற முடியும்.

இதற்கு மேலாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விநியோகம் செய்யும்போது நுகர்வோர்களுக்கு ஏற்படக் கூடிய இழப்புத் தொடர்பாக, காப்புறுதி ஒப்பந்தங்கள் செயற்படுவதைக் காணலாம். இதற்கு உதாரணமாக உற்பத்திப் பொருட்களுக்கான பொறுப்புக் காப்புறுதியைக் காட்ட முடியும்.

## தனிநபர் காப்புறுதி (ஆயுட் காப்புறுதி)

வணிகங்களுக்கு மட்டுமின்றி நபர்களுக்கும் காப்புறுதி முக்கிய பங்காற்றி வருகின்றது. ஒப்பந்த காலத்துள் ஒருவர் இறக்க நேரிடுமாயின் அவரில் தங்கியிருப்போருக்கு நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கு ஆயுளுறுதி வழிவகை செய்கிறது. திடீர் விபத்துக்களுக்கும் இவ்வாறான காப்புறுதித் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் சேமிப்புமுறை ஒன்றாகவும் நபர்களுக்கான ஆயுட்காப்புறுதி காணப்படுகின்றது. ஒப்பந்தம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டதன்பின் இழப்பு ஏற்படாது விட்டாலும் காப்புறுதி உடன்படிக்கையின்படி முதிர்வுத் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு காப்புறுதி நபர்களுக்கு மட்டுமின்றி, வணிகங்களுக்கும், நாட்டுக்கும் பாரிய சேவைகளை வழங்குகின்றது.

எமது நாட்டின் காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களை அரச துறையிலும், தனியார் துறைகளிலும் காணமுடியும். சாதாரணமாக காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற காப்புறுதி நிறுவனங்கள் அனைத்தும் கம்பனிச் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டு பொதுக் கம்பனியாகவே செயற்படும். இவ்வாறான நிறுவனங்களுக்கான உதாரணங்கள் சில கீழே காணலாம்.

- வரையறுத்த இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
- வரையறுத்த செலிங்கோ காப்புறுதிக் கம்பனி
- வரையறுத்த அவீவா NDB ஈகிள் காப்புறுதிக் கம்பனி

விசேட வகையான காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொடுக்கும் காப்புறுதி நிறுவனங்கள் சில அரச துறையிலும் காணப்படுகின்றன. அவற்றிக்கு உதாரணங்களாக

- இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
- விவசாய பயிர்ச்செய்கை காப்புறுதிச் சபை

  என்பவற்றைக் கூற முடியும்.

இலங்கையில் காப்புறுதி வணிகத்தைப் பதிவுசெய்தல், கட்டுப்படுத்தல் அபிவிருத்தி செய்தல், பரிசீலனை செய்தல், ஒழுங்கமைத்தல் என்பவற்றுக்கு இலங்கைக் காப்புறுதிச் சபையானது பொறுப்பான அமைப்பாகச் செயற்படுகின்றது.

காப்புறுதி நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளும் நபருக்கும், காப்புறுதிக் கம்பனிக்கும் இடையே உடன்பாடு ஒன்று ஏற்படுதல் வேண்டும். இவ்வுடன்பாடானது உடன்படிக்கையாக மாறுவதற்குக் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

## காப்புறுதி ஒப்பந்தம்

பிரதானமாக இரு பிரிவினர் காப்புறுதியோடு தொடர்புபடுவதைக் காணலாம். அவையாவன காப்புறுதி நட்டத்தைப் பொறுப்பேற்கும் நிறுவனமும், காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளும் பிரிவினருமாவர். இவ் இரு பிரிவினருக்கும் இடையில் எழுத்து மூலமாக ஏற்படும் உடன்பாடு காப்புறுதி ஒப்பந்தம் என அழைக்கப்படும். இதற்கேற்ப உடன்பாடு ஏற்படும் பொழுது நட்டத்தைப் பொறுப்பேற்கும் பிரிவினர் காப்புறுத்துவோன் எனவும் காப்புறுதி நட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் பிரிவினர் காப்புறுதி செய்பவர் எனவும் அழைப்பர்.

காப்புறுதி ஒப்பந்தத்திற்கு இவ்விருபிரிவினரும் தொடர்புபட்டாலும் உடன்படிக்கைக்குத் தொடர்புபடாது அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் இன்னொரு பிரிவினரும் காணப்படுகின்றனர். இவர்களை மூன்றாம் கட்சியினர் என்றும் அழைப்பர். காப்புறுதி ஒப்பந்தத்திற்கேற்ப ஏற்படும் இடரொன்றின் காரணமாக, இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமை பெறும் வெளிநபர்கள் அல்லது சொத்து உடைமையளராக மூன்றாம் கட்சியினர் எனப்படுவர்.

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினைச் செயற்படுத்துவதற்கான அடிப்படைக் கோட்பாடுகள் சில பின்வருவனவாகும் :

## காப்புறுதிக் கோட்பாடு

காப்புறுதிச் சேவையினை வெற்றிகரமாகச் செயற்படுத்திச் செல்வதற்குப் பிரதானமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பல காப்புறுதிக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வரும் முறையில் விபரிக்க முடியும்.

காப்புறுதிக் கோட்பாடுகள்
- காப்புறுதி செய்யும் உரிமை
- உச்சநம்பிக்கை
- இழப்பீட்டுத் தத்துவம்

### காப்புறுதி செய்யும் உரிமை (Insurable Interest)

இது உரிமைத் தத்துவம் எனப்படும். இதன் மூலம் கருதப்படுவது உயிருக்கு அல்லது சொத்துக்குக் காப்புறுதி செய்வதற்குள்ள சட்ட ரீதியான உரிமையைக் குறிக்கும். சட்ட ரீதியாக உரிமை அற்ற ஒன்றை ஒருவருக்கு காப்புறுதி செய்ய முடியாது. இதன்படி காப்புறுதிக்குட்படும் சொத்துக்கள் அல்லது உயிர்கள் அழிவுறுவதன் மூலம் பொருளாதார நட்டம் ஒன்று குறித்த நபருக்கு ஏற்பட வேண்டும். காப்புறுதிசெய்வோருக்கு அச்சொத்துக்களின் மீது சட்ட ரீதியான

தொடர்பொன்று அல்லது உரிமையொன்று இருக்க வேண்டும். காப்புறுதி உரிமை தொடர்பான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- சொத்துக் காப்புறுதியின் போது அதன் சட்ட ரீதியான உரிமையாளருக்கு காப்புறுதி உரிமை உண்டு.
- கணவன் மனைவிக்கிடையிலே அவர்கள் ஒவ்வொருவருக்கும் இடையிலான ஆயுள் தொடர்பாகக் காப்புறுதி உரிமை உண்டு.
- பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு காப்புறுதி செய்ய உரிமை உண்டு.
- கடன்கொடுத்தோர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட கடனின் அளவுவரை கடன்பட்டோனது ஆயுளுக்கு காப்புறுதி செய்வதற்கு உரிமை உண்டு.

## உச்ச நம்பிக்கை (Utmost good faith)

காப்புறுதி ஒப்பந்தத்திற்கு உடன்படும் இருபிரிவினரும் அவ் ஒப்பந்தத்திற்கான தகவல்களைத் தான் அறிந்த வரையில் அவர்களுக்கிடையே சரிவர வெளிப்படுத்த வேண்டும் என இக்கோட்பாட்டின் மூலம் கூறப்படுகின்றது. காப்புறுதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் போது காப்புறுதி விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் தேவையான தகவல்களை முன்வைக்க வேண்டி ஏற்படும். இதற்கேற்ப எந் நிபந்தனையின் அடிப்படையில் எப்பெறுமானத்திற்குக் காப்புறுதி ஒப்பந்தம் நட்டஈடு வழங்க உடன்படுகின்றது என்பதனைத் தீர்மானிக்க முடியும்.

இங்கு எக்கட்சியினரேனும் யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தாது விட்டால் அது காப்புறுதி ஒப்பந்தத்தை பாதிக்கக் கூடியதாயின் காப்புறுதி ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு எதிர்த்தரப்பினருக்கு உரிமை உண்டு. இது உயர் நம்பிக்கைத் தத்துவம் எனவும் அழைக்கப்படும்.

## இழப்பீட்டுத் தத்துவம் (Indemnity)

காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களுக்கு யாதேனும் ஒரு வகையில் அழிவு ஏற்பட்டால் அவ்வழிவிலிருந்து முன்னைய நிலைக்கு அச்சொத்தை கொண்டு வருவதற்குரிய நட்ட ஈட்டுத் தொகையினை மட்டும் செலுத்துவது இக்கோட்பாட்டின் கருத்தாகும். எனவே ஏற்பட்ட இழப்பிற்குக் கூடிய பெறுமானத்தை நட்ட ஈடாகப் பெற்றுக் கொள்வதை இக்கோட்பாடு தடை செய்கிறது.

உதாரணமாக வணிகர் ஒருவர் ரூபா பத்து இலட்சம் பெறுமானம் உள்ள தமது மோட்டார் வாகனத்தை அப்பெறுமானத்திற்கே காப்புறுதி செய்யப்பட்டுள்ள போது ரூபா இரண்டு இலட்சம் பெறுமானத்திற்கான பகுதி சேதம் அடைந்தது எனக் கொண்டால் நட்ட ஈட்டுத் தொகையாகக் காப்புறுதிக் கம்பனியிடம் இருந்து ஏற்பட்ட நட்டத்தின் அளவான இரண்டு இலட்சம் ரூபா தொகையையே பெற்றுக் கொள்ள முடியும்.

செயற்பாடு 04

1. பல்வேறு காப்புறுதிக் கம்பனிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள காப்பறுதி ஒப்பந்தங்களின் வகைகளைப் பட்டியல்படுத்தி அவை தொடர்பாகச் சுருக்கமான விளக்கத்தைத் தருக.

2. வணிகங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் பல்வேறு முறையிலான நட்டங்களையும் அவற்றை ஈடு செய்யக் கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளையும் பெயரிடுக.

3. உங்கள் பிரதேசத்திலுள்ள வணிகர்கள் சிலரைச் சந்தித்து அவர்கள் பெற்றுள்ள காப்புறுதி ஒப்பந்த வகைகளையும், அவ் ஒப்பந்தங்களின் மூலம் அவர்கள் அனுபவிக்கும் அனுகூலங்கள் தொடர்பாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். அத்தகவல்களினூடாக வணிகர்களுக்குப் பெற்றுக் கொள்ளக் கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளையும் அவற்றின் அனுகூலங்களையும் உள்ளடக்கிய ஒரு துண்டுப் பிரசுரத்தையும் தயாரித்து ஆசிரியரிடம் சமர்ப்பியுங்கள்.

4. காப்புறுதிச் சேவைகளுக்காக பத்திரிகைகளில் வெளிவந்த தகவல்களைச் சேகரித்து அவை நீங்கள் கற்ற விடயங்களுடன் தொடர்புறுத்தும் முறையை இனம் காணுங்கள். உங்கள் பரிசீலனை-யை பொருத்தமான முறையில் வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

## 3.3 தொடர்பாடல் சேவைகள் (Communication)

தற்காலத்தில் தனி நபர்களோ அல்லது நிறுவனங்களோ தனித்துச் சுயாதீனமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதும் நிலைத்து நிற்றலும் மிகக் கடினமானதாகும். எப்போதும் ஒருவருடன் ஒருவர் தகவல்களைப் பரிமாறிக் கொண்டு தொடர்புகளைப் பேணுவது இன்று அத்தியாவசியத் தேவையாக உள்ளது. எனவே அதற்காக எல்லோருக்கும் உதவி செய்வதாகத் தொடர்பாடல் அமைகின்றது.

வணிகமொன்றை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக மிக அவசியமான துணைச் சேவைகள் எனும் வகையில் தொடர்பாடல் முக்கியமானதொன்றாகும். செய்திகள், தகவல்கள், எண்ணங்கள் என்பனவற்றைத் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கிடையில் யாதேனுமொரு ஊடகத்தினூடாகப் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுவதை **தொடர்பாடல்** என அழைப்பர்.

செய்தி, தகவல், எண்ணம் போன்றன ஒரே நேரத்தில் பொதுவாக எல்லோருக்கும் முன்வைக்கப்படுவதை வெகுசனத்தொடர்பாடல் எனக் குறிப்பிடலாம் இதற்காகப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் பயன்படுத்தப்படும்.

## வணிக நடவடிக்கைகளுக்குத் தொடர்பாடலின் முக்கியத்துவம்

இன்று வணிக நடவடிக்கைகள் சர்வதேச ரீதியாக வியாபித்ததன் விளைவாக தொடர்பாடலின் முக்கியத்துவமும் மேலும் அதிகரித்தது. தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியும் வணிகங்களுக்கான தொடர்பாடல் நடவடிக்கைகளை வினைத்திறனுடனாக மேற்கொள்வதற்குக் காரணமாக அமைந்தது. நவீன தொடர்பாடலின் விரைவான வளர்ச்சி காரணமாக உலகமானது மிகத் குறுகியதாக மாறிவிட்டது.

### வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

தமது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வணிக நிறுவ னங்களுக்குப் பல்வேறு விதமான தகவல்கள் தேவைப்படுகின்றன. இதனடிப்படையில்பொருட்களின் விலை, மூலப்பொருட்கள், போட்டியாளர்கள், ஊழியர்கள் பற்றிய பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தொடர்பாடல் துணை புரிகின்றது.

### பல்வேறு தரப்பினருக்குத் தகவல்களை வழங்குதல்

வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்லும்போது உரிய தரப்பினருக்குத் தகவல்களை வழங்குதல் தொடர்பாக தொடர்பாடல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதன்படி உரிமையாளர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், ஊழியர்கள், அரசும் ஏனைய பல்வேறு வெளியக நிறுவனங்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்குத் தேவையான தகவல்களை வழங்குவதால் தொடர்பாடல் மிக முக்கியத்துவமுடையதாக அமைகின்றது.

### நிறுவனத்துள் பல்வேறு துறைகளுக்கிடையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல்

நிறுவனத்தினுள் பல்வேறு பகுதிகளுக்குமிடையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்குத் தொடர்பாடல் அவசியமானதாகும். பாரியளவான நிறுவனங்களில் உற்பத்தி, விற்பனை, மனிதவளம், நிதி போன்ற பல்வேறு பகுதிகளைக் காண முடியும். இப்பகுதிகளுக்கிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வது தொடர்பாடலினூடாகவேயாகும்.

## பல்வேறு தரப்பினர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளல்

வாடிக்கையாளர்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதற்குத் தொடர்பாடல் அவசியமானதாகும்.

## முகாமைத்துவக் கருமங்களை மேற்கொள்ளல்

வணிக நிறுவனங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், மனித மற்றும் பௌதிக வளங்களை முறையான வகையில் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும், எல்லாக் கருமங்களையும் ஒழுங்கான முறையில் செயற்படுத்துவதற்கும் தொடர்பாடல் முக்கிய அம்சமாகும்.

## தீர்மானம் எடுத்தல்

வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்லும்போது பல்வேறு தீர்மானங்கள் எடுக்க வேண்டியேற்படும். சரியான முறையில் தீர்மானங்களை எடுப்பதற்குத் தகவல்கள் அவசியமாகும். தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் தொடர்பாடல் அளப்பரிய பங்களிப்பினை வழங்குகின்றது.


## விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள்

பண்டங்களை உற்பத்தி செய்தல், விலையை நிர்ணயித்தல், விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உற்பத்தியை நுகர்வோர் அறியச் செய்தல் (மேம்படுத்தல்) போன்ற நடவடிக்கைகளுக்காக வணிக நிறுவனமொன்றுக்குத் தொடர்பாடல் மிக முக்கியத்துவமுடையது.

மேற்காட்டிய விடயங்களுக்கேற்ப வணிகங்களது எல்லாச் செயற்பாடுகளுக்கும் தொடர்பாடல் துணைபுரிகின்றது என்பதை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும்.

## தொடர்பாடல் செயற்பாடு

வணிகமொன்றில் தொடர்பாடல் பல்வேறு முறைகளில் செயற்பட முடியும். நிறுவனத்தில் நடைபெறும் அனைத்துத் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கும் பொதுவான சில அடிப்படை அம்சங்களை இனம் காட்ட முடியும். அனுப்புவோர் தொடக்கம் பெற்றுக் கொள்பவர் வரையில் செய்திகளை அனுப்பும் செயற்பாட்டுப் படிமுறை பின்வருமாறு அமைவதை அவதானிக்கலாம்




**3.1 அனுப்புபவர் தொடக்கம் பெறுபவர் வரையிலான தொடர்பாடல் செயல்முறை**


| | | |
|---|---|---|
| அனுப்புபவர் | - | செய்தியை அனுப்பும் நபர் அல்லது நிறுவனம் |
| செய்தி | - | அனுப்புபவர் மூலம் வழங்கப்படும் செய்தி |
| ஊடகம் | - | செய்தி அனுப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் முறை. வாய்மொழி அல்லது எழுத்து மூலம் (கடித மூலம், தொலைபேசி மூலம் , கூட்டங்களாக)இருக்க முடியும். |
| பெறுபவர் | - | செய்தி சென்றடைய வேண்டிய நபர் |
| துலங்கல் | - | தகவலைப் பெற்றவர் அது தொடர்பாக நடந்து கொள்ளும் முறை |
| பின்னூட்டல் | - | கிடைத்த செய்தி தொடர்பாகப் பெறுபவரது எண்ணங்களும் அதற்கான துலங்கலும். |

## வணிகங்களினால் கவனத்திற்கொள்ளப்படும் தொடர்பாடல் துறைகள்

வணிக நிறுவனமொன்றின் தொடர்பாடல் நடவடிக்கைகளை இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- அகத்தொடர்பாடல் அல்லது உள்ளகத் தொடர்பாடல்
- புறத்தொடர்பாடல் அல்லது வெளியகத் தொடர்பாடல்

நிகழ்த்தப்படும் தொடர்பாடலை உள்ளக, வெளியக எனும் வகையில் வகைப்படுத்தி பின்வரும் படம் விளக்குகிறது.




படம் 3.5 தொடர்பாடற் துறைகள்

## அகத்தொடர்பாடல்

வணிக நிறுவனமொன்றினுள் பல்வேறு தரப்பினர்களுக்கிடையே தகவல்கள் பரிமாற்றிக் கொள்ளப்படும் என்பதே இதன் கருத்தாகும். இதன்படி உரிமையாளர்கள், முகாமையாளர்கள், முகாமையாளர்கள் அல்லாத ஊழியர்கள் என்போர் முக்கியம் பெறுகின்றனர்.

## புறத்தொடர்பாடல்

வணிக நிறுவனமொன்று வெளி நபர்களுடனும், நிறுவனங்களுடனும் நடத்தும் தொடர்பாடல் புறத்தொடர்பாடல் எனக் குறிப்பிடலாம். இதில் பல்வேறு வழங்குனர்கள், சில்லறை, மொத்த வியாபாரிகள், முகவர்கள் போன்ற இடைநடுவர்களும் அரசு மற்றும் ஏனைய நிறுவனங்கள், நுகர்வோர்கள் போன்றோர்களும் இதில் அடங்குவர்.

வணிக நிறுவனமொன்று உள்ளக வெளியகத் தரப்பினர்களுடன் நடத்தப்படும் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காகப் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துகின்றன.

## வணிகங்களினால் பயன்படுத்தப்படும் பல்வேறு தொடர்பாடல் ஊடகங்கள்

தொடர்பாடல் ஊடகங்களையும் முறைகளையும் பலவாறு வகைப்படுத்த முடியும். பரந்தளவில் அவற்றைப் பின்வரும் முறையில் வகைப்படுத்தி விபரிக்க முடியும்.

| | |
|---|---|
| வாய்மொழி மூலம் | கூட்டங்கள், கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் |
| எழுத்து மூலம் | கடிதம், விளம்பரம், பத்திரிகை, சுற்றறிக்கைகள், விளம்பரப்பலகை, அறிக்கைகள் |
| இலத்திரனியல் | தொலைக்காட்சி, வானொலி, ஒலிபெருக்கி இயந்திரம், வீடியோ நாடா, தொலைபேசி (இன்டர்கொம், கையடக்க) மின்னஞ்சல், தொலைநகல், இணையம் |
| குறியீட்டு சமிக்ஞை | பொதி குறியீடு, வீதிச் சமிக்ஞை, கட்டளைக்குறிகள் |

மேற்குறிப்பிட்டபடி தொடர்பாடல் ஊடகங்களை விரிவாக நான்கு பிரிவுகளாக வகைப்படுத்திக் காட்டலாம். அதிகமான சந்தர்ப்பங்களில் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட, பலதும் உள்ளடக்கப்பட்ட கலவைகளாகப் பயன்படுத்தப்படுவதைக் காண முடியும். உதாரணமாக தொலைபேசி, இலத்திரனியல் ஊடகமொன்றாகக் காணப்பட்டாலும் அவை வாய்மொழி மூலத் தன்மையிலே நடைபெறுகின்றது. நவீன தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சியின் காரணமாகப் புதிய தொடர்பாடல் முறைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. உலகமயப்படுத்தலின் மூலம் புதிய பொருளாதார அமைப்பு முறையொன்று உருவாகி தகவல் தொழில்நுட்பயுகமாக மாற்றமடைவதற்குத் தொடர்பாடலே ஒரு முக்கியமான காரணியாகும்.

### செயற்பாடு 05

1) நவீன தொடர்பாடல் முறையில் ஏற்பட்ட புரட்சி தொடர்பாகச் சுருக்கக் கட்டுரையொன்று எழுதுக.
2) வணிக நடவடிக்கைகளுக்கு நவீன தொடர்பாடல்களைப் பயன்படுத்தும் முறையைக்காட்டக் கூடிய எண்ணக் கருவை வெளிப்படுத்தும் படம் ஒன்றை வரையுங்கள்.
3) வணிக நடவடிக்கைகளுக்கான தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி பொருத்தமான சுவர்ப்பத்திரிகையொன்றைத் தயாரிக்க.
4) பரவலாகப் பயன்படுத்தப்படும் சர்வதேச பொதியிடல், போக்குவரத்து ஆகியவற்றின் குறியீடுகளையும், சமிக்ஞைகளையும் சேகரித்து, அவை வெளிப்படுத்தும் செய்தி தொடர்பாக உங்களது நண்பர்கள் நண்பிகளுடன் கலந்துரையாடுங்கள்.

## 3.4 போக்குவரத்து (Transportation)

நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் தொடர்பாகச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவை எமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவைகளாகவோ அல்லது வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவையாகவோ இருக்க முடியும். அவை உமது வீட்டுக்குக் கிடைப்பதற்குப் போக்குவரத்தின் உதவி பெறப்படவில்லையா? போக்குவரத்து வணிக நடவடிக்கைகளில் முக்கியமானதும் அவசியமானதுமாகும். துணைச் சேவைகளுள் பிரதான ஒன்றாகப் போக்குவரத்துச் சேவையைக் குறிப்பிடலாம்.

ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பொருட்களையும், சேவை களையும், பிரயாணிகளையும் கொண்டு செல்வது **போக்குவரத்து** எனக் குறிப்பிடலாம்.

போக்குவரத்து வணிகங்களுக்கு மட்டுமின்றி முழு சமூகத்திற்கும் அத்தியாவசியமானதொரு சேவையாக இருப்பதுடன் மனித நடவடிக்கைகளுக் கான முக்கியமான வளமான நேரத்தை முறையாக பயன்படுத்தி கொள்வதற்கு துணை புரிகிறது. எனவே வணிக சேவைகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள போக்குவரத்து உதவுகிறது.

### போக்குவரத்துச் சேவையின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

- **உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை உரிய வேளையில் பெற்றுக் கொள்ளல்.**

வணிகங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை போக்குவரத்தின் மூலம் உரிய வேளையில் பெற்றுக் கொள்வதற்கு இயலுமாக இருக்கின்றது.

- **ஊழியர்களை ஒன்று திரட்டல்**

வணிக நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு ஊழியர்கள் உரிய வேளைகளில் வேலைக்குச் சமூகமளித்தல் வேண்டும். சில வணிகங்களில் இதற்காக வேண்டி போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கின்றனர்.

## ● உற்பத்திப் பொருட்களை உரியவேளையில் சந்தைக்கு வழங்குதல்

நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உரியவேளைகளில் சந்தைக்கு விநியோகிப்பதற்குத் துணையாக இருப்பது போக்குவரத்தாகும். நீண்டகாலம் வைத்திருக்க முடியாத பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கும், அவற்றை உரிய வேளையில் சந்தைக்கு அனுப்புவதற்கும், போக்குவரத்து துணைபுரிகின்றது. உதாரணமாக இறைச்சி, மீன், பால், விதைகள், பழங்கள் போன்றவற்றை சந்தைக்கு விரைவாக அனுப்புவதற்கு போக்குவரத்து துணை புரிவதால், அவற்றின் மூலம் விற்பனைச் செயற்பாடுகள் மட்டுமின்றி உற்பத்தி நடவடிக்கைகளிலும் முன்னேற்றத் தன்மை ஏற்படுகின்றது.

## ● பேரளவு உற்பத்திக்குத் தூண்டுகோலாக இருத்தல்

போக்குவரத்தின் மூலம் பல்வேறு பொருட்களை நாடு முழுவதும் அல்லது சர்வதேச ரீதியாக விநியோகிக்கக் கூடியதாக இருப்பதனால் கேள்வி அதிகரித்து உற்பத்தி அதிகரிப்பதனூடாக வணிகர்களுக்குத் தமது உற்பத்தி நடவடிக்கைகளை பேரளவில் மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

## ● உற்பத்திச் செலவை இழிவுபடுத்திக் கொள்ளல்

பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான காரணிகளை இலகுவாக ஒன்று திரட்டி உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முடியுமாக இருப்பதனால் உற்பத்தி அதிகரித்து, அதன் மூலம் சிக்கனங்கள் ஏற்பட்டு உற்பத்திச் செலவினை குறைத்துக் கொள்வதற்கு வணிகங்களுக்கு முடியுமாக இருக்கும்.

## ● நேரம் சேமிக்கப்படுதல்

போக்குவரத்தின் காரணமாக இரு பிரதேசத்திற்கும் உள்ள இடைத்தூ ரத்தைக் குறைவான நேரத்தில் அடைந்துகொள்ள முடியும். இதன்காரணமாக வணிகர்கள் தமது நேரத்தைச் சேமிப்பதனூடாக தமது நடவடிக்கைகளை வினைத்திறனுடையதாக மேற்கொள்ள முடியும்.

## ● பிரதேச சிறக்குமியல்பு மூலம் உதவி பெற்றுக் கொள்ளல்.

சில பிரதேசங்கள், சில நாடுகள் பல்வேறு காரணங்களினால் ஏதேனுமொரு உற்பத்தி தொடர்பாகச் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கும். போக்குவரத்தின் மூலம் அவ்வுற்பத்திகளை பல்வேறு சந்தைக்கு விநியோகிக்கக் கூடியதாக இருப்பதனால் இவ்வாறான பிரதேசங்கள் முன்னேற்றமடைந்த நிலைக்கு மாறி உள்ளன.

### ● சந்தை விரிவடைதல்

போக்குவரத்து, சந்தைகள் விரிவடைவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. போக்குவரத்து தேசிய அல்லது சர்வதேச ரீதியாக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகளை நுகர்வதற்குச் சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது.


யாதேனுமொரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டவற்றை பிரதேசம் முழுவதும், நாடு முழுவதும், அனைத்து உலகத்திற்கும் தேவைக்கேற்றவாறு விநியோகம் செய்வது போக்குவரத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கிய கருமமாகும். பொதுவாக நோக்கும்போது உலக சந்தைகளின் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், உலக சந்தைகளது நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும், பிரசித்தமடைவதற்கும் போக்குவரத்து அவசியமானது.

## போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள்

போக்குவரத்து முறையொன்றை வினைதிறனுடையதாக மாற்றுவதற்கு உறுதுணையாக அமையும் காரணிகளின் தொகுதியை போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள் எனக் குறிப்பிடலாம். இவ் அடிப்படை அம்சங்கள் யாவும் ஒன்றிணைந்து அபிவிருத்தியடைந்தமையால் போக்குவரத்து முன்னேற்றம் அடைந்தது. போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள் நான்கும் பின்வருமாறு.

**போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள்**

| பாதை | ஊடகம் | சக்தி | தரிப்பிடம் |
|---|---|---|---|
| ● பெருந்தெரு<br>● புகையிரதப் பாதை<br>● நீர்வழி<br>● வான்வழி | ● வசுவண்டி<br>● லொறி<br>● புகையிரதம்<br>● கப்பல்/படகு<br>● விமானம் | ● எரிபொருள்<br>● மின்சாரம்<br>● நிலக்கரி<br>● வாயு<br>● சூரிய சக்தி | ● வசுவண்டித் தரிப்பிடம்<br>● புகைவண்டித் தரிப்பிடம்<br>● துறைமுகம்<br>● விமானநிலையம் |




3.6 போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களின் விளக்கப் படம்

## பாதை

போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பாதையே இதன் மூலம் கருதப்படுகின்றது. அவற்றைப் பிரதானமாக பெருந்தெரு, புகையிரதப் பாதை, நீர்வழி, வான்வழி என வகைப்படுத்திக் காட்ட முடியும்.

தரையின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெருந்தெருக்கள் பல்வேறு பிரதேசங்களை ஒன்றிணைக்கக் கூடியவாறு உள்நாட்டிற்குள்ளும், சர்வதேச ரீதியிலும் நிறுவப்பட்டுள்ளன. நதிகள், கால்வாய், கடல் வழி மூலம் போக்குவரத்துச் செய்வது உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து என அழைக்கப்படும். நீர்வழிப் போக்குவரத்தில் கடல்வழிப் போக்குவரத்து உலகளாவிய போக்குவரத்து முறையெனக் கொள்ளப்படுகின்றது. வான்வழி கூட உள்நாட்டிற்குள்ளாகவும் சர்வதேச ரீதியாகவும் பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து முறையொன்றாகும்.

## ஊடகம்

பல்வேறு போக்குவரத்து வழிகள் மூலம் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களை ஊடகங்கள் என அழைக்கலாம்.

| பாதை | ஊடகம் |
|---|---|
| பெருந்தெருப்பாதை | வண்டில், துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, மோட்டார் கார், மோட்டார்வான், வசுவண்டி, லொறி வண்டி, வடம் பொருத்திய கார் (cable car) |
| புகையிரதப் பாதை | மின்சாரப் புகைவண்டி, டீசல் புகைவண்டி, புகைவண்டி |
| நீர்வழி | வள்ளம், படகு, வத்தை, தோணி, கப்பல் |
| வான்வழி | ஆகாய விமானம், ஹெலிகப்டர் |

## சக்தி

போக்குவரத்துச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் வலுவினை சக்தி என அழைப்பர். முற்காலத்தில் இதற்காக மனித வலுவினையும், விலங்கு வலுவினையும் பயன்படுத்தினர். ஆனால் தற்போது தொழினுட்ப முன்னேற்றத்தின் காரணமாகப் பல்வேறு சக்திகளைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக நிலக்கரி, கணிய எண்ணெய், மின்சாரம், எரிவாயு, சூரிய சக்தி போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

## தரிப்பிடம்

போக்குவரத்து ஊடகத்தினைப் பெற்றுக் கொள்ளும் இடம் அல்லது நிலையம் தரிப்பிடம் எனப்படும். போக்குவரத்து ஊடகத்தின் மூலம் கொண்டு செல்லப்படுவனவற்றை ஏற்றுதல், இறக்குதல், மற்றும் ஊடகங்களுக்கு மாற்றுதல் போன்ற நடவடிக்கைகள் தரிப்பிடங்களிலேயே பிரதானமாக நடைபெறுகின்றது. போக்குவரத்து ஊடகங்களுக்கு உரித்தான தரிப்பிடங்களைப் பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கப்படும்.
உதாரணமாக : வசுவண்டித் தரிப்பிடம், துறைமுகம், புகையிரத நிலையம், விமான நிலையம் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## பொருத்தமான போக்குவரத்து முறையொன்றைத் தெரிவு செய்யும்பொழுது வணிகர்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள்

### பொருளின் தன்மை

பொருட்களின் தன்மைக்கேற்ப தெரிவு செய்யபப்படும் போக்குவரத்து ஊடகம் வேறுபடும். உதாரணமாக விரைவாகப் பழுதுபடும் பொருட்களுக்காகக் குளிரூட்டப்பட்ட வசதிகள் கொண்ட லொறி வண்டியைப் பயன்படுத்த வேண்டியேற்படும்.

### கிரயம்

வணிகர் ஒருவர் போக்குவரத்து ஊடகமொன்றைப் பயன்படுத்துவதற்காக ஏற்படும் செலவினை முதலில் கவனத்திற் கொள்ள வேண்டும். ஏனெனில் போக்குவரத்துச் செலவானது நேரடியாகப் பொருளின் விலையின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது.

### கொள்ளளவு

குறிப்பிட்ட ஊடகத்தின் மூலம் ஒரே முறையில் கொண்டு செல்லக் கூடிய பொருட்களின் அல்லது பயணிகளின் அளவே இதன் மூலம் கருதப்படும். கொண்டு செல்வதற்காக உள்ள பொருட்களின் தன்மையிலும், அளவுகளுக்கேற்பவும், பாதைகளின் இயல்புக்கேற்பவும், போக்குவரத்து முறைகளுக்கமையவும் கொள்ளளவு வேறுபடும்.

### பாதுகாப்பு

பிரயாணிகளுக்கு மட்டுமின்றி கொண்டு செல்லப்படும் பொருட்களுக்குமான பாதுகாப்பையே இது கருதுகின்றது. அதனால் வணிகர் மூலம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறைந்த நட்டத்தைக் கொண்ட மிகப் பாதுகாப்பான முறை தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டியது முக்கியமானது.

## விரைவு

குறித்த போக்குவரத்துமுறை எடுத்துக் கொள்ளும் கால அளவு இதுவாகும். வணிகர் தமது போக்குவரத்து நடவடிக்கைகள் எந்தளவு விரைவாக நடைபெறுகிறது என்பதை தேடிப் பார்த்தல் வேண்டும். விசேடமாக விரைவாகப் பழுதடையும் பொருட்கள் தொடர்பாகவே இக்காரணம் முக்கியம் பெறுகின்றது. அதே போன்று ஊழியர்களைக் கொண்டு செல்லலின் போது விரைவு மிக முக்கியமானதாகும். காரணம் விரைவின் மூலம் நேரம் சேமிக்கப்படுகின்றது.

## கிடைப்பனவு

போக்குவரத்து ஊடகமொன்றைக் தீர்மானிக்கும் பொழுது அதனை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றதா? என்பதே இதன் கருத்தாகும். இங்கு வணிகர் தமது தேவை, விருப்பம் என்பவற்றுக்கேற்ப போக்குவரத்து முறையைப் பெற்றுக் கொள்வதில் இலகுத் தன்மையை கருத்திற் கொள்ளல் வேண்டும்.

### செயற்பாடு 06

அ) வணிகர்களுக்குப் போக்குவரத்தின் முக்கியத்துவம் பற்றிக் காட்டும் வகையில் எண்ணக்கரு விளக்கப்படம் ஒன்றை உருவாக்குக.

ஆ) இலங்கைப் படமொன்றில் இலங்கையின் முக்கியமான புகையிரதப் பாதை, பெருந்தெருக்கள், துறைமுகம், விமானநிலையங்கள் என்பவற்றை குறித்துக் காட்டுங்கள்

இ) பின்வரும் போக்குவரத்து முறைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பட்டியல்படுத்துங்கள்
- அ) பெருந்தெரு
- ஆ) புகையிரதப் பாதை
- இ) வான்வழி
- ஈ) கடல்வழி

ஈ) இலங்கையின் போக்குவரத்து முறையை மேம்படுத்துவது தொடர்பில் எடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் பற்றி உமது பாடசாலையின் வணிக சஞ்சிகைக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

## 3.5 களஞ்சியப்படுத்தல் (Warehousing)

வணிகத்திற்குத் தேவையான மூலப் பொருட்களை மட்டுமின்றி முடிவுப் பொருட்களையும் அவற்றை பயன்படுத்தும் வரை பாதுகாப்பாக சேகரித்து வைத்திருப்பது அவசியமானதாகும். இதற்கு களஞ்சியப்படுத்தல் சேவை துணை புரிகின்றது. நடைமுறையில் உற்பத்தி நடவடிக்கைகள் மட்டுமின்றி விநியோகச் செயற்பாடுகளும் பாரியளவில் அதிகரித்துச் செல்வதன் காரணமாக களஞ்சியப்படுத்தல் சேவையின் தேவைப்பாடு மேலும் அதிகரித்துச் செல்கின்றது எனலாம்.

பண்டங்களை சேகரித்து, பாதுகாத்து, முறையாக விநியோகிக்கும் செயலொழுங்கு '**களஞ்சியப்படுத்தல்**' எனப்படும். எனவேதான் வணிகங்களின் அடிப்படைத் துணைச் சேவைகளுள் ஒன்றாக களஞ்சியப்படுத்தல் சேவை முக்கியத்துவம் பெறுகிறது.

### வணிகரொருவருக்கு களஞ்சியப்படுத்தலின் முக்கியத்துவம்

வணிகர்களுக்கு தங்கள் வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் போது களஞ்சியப்படுத்தலினால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. அவை பின்வருமாறு

#### உற்பத்திச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லல்.

வணிகர்கள் தங்களது உற்பத்தி நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும்பொழுது பல்வேறு மூலப்பொருட்களுக்கான தேவை ஏற்படும். அவற்றை பற்றாக்குறையின்றி தொடர்ந்து உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு களஞ்சியப்படுத்தல் அவசியமாகும்.

#### விநியோகச் செயற்பாடுகளை தொடர்ந்து நடாத்திச் செல்ல முடிதல்

வணிகர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களைச் சேகரித்து வைப்பற்கு களஞ்சியப்படுத்தல் அவசியமானதாகும். அவ்வாறே விநியோகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மொத்த, சில்லறை வியாபாரிகள், முகவர்கள், போன்ற அனைத்து தரப்பினரும் பண்டங்களை களஞ்சியப்படுத்தல் செய்ய வேண்டும். இதனால் நுகர்வோர் தேவைகளை தொடர்ச்சியாகப் பூர்த்தி செய்யலாம்.

## கேள்வி நிரம்பலுக்கிடையில் சமநிலையைப் பேணிச் செல்லல்

ஏதேனும் ஒரு வகைப் பண்டத்திற்கு சந்தையில் நிரம்பல் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் பண்டம் மேலதிகமாகக் காணப்படும் அதேவேளை நிரம்பல் குறையும் சந்தர்ப்பங்களில் பற்றாக்குறையொன்றும் ஏற்படலாம். இந்நிலைமைகளை களஞ்சியப்படுத்தல் மூலம் குறைத்துக் கொள்ள முடியும். இதன் மூலம் குறுங்காலத்தில் பண்டங்களின் விலைத் தளம்பலைத் தடுக்க முடியும்.

## உற்பத்தி நடவடிக்கைகள் பருவகால ரீதியாக நடைபெறும் சந்தர்ப்பங்களின் போது அவற்றைச் சேகரித்து வைக்க முடிதல்

பிரதானமாக விவசாய உற்பத்திகள் வருடத்திற்கு இரு போகங்களில் அல்லது மூன்று போகங்களில் அறுவடை நடைபெறும். எனவே, இதன் காரணமாகப் பண்டங்களைச் சேகரித்து வைப்பதற்குக் களஞ்சியப்படுத்தல் அவசியமாகும்.

## பண்டங்களை கட்டளையிட்டு பெற்றுக் கொள்வதற்குக் காலதாமதம் ஏற்படல்

வணிகர்களுக்குத் தேவையான ஏதேனும் பண்டங்களை கட்டளையிட்டு பெற்றுக் கொள்வதற்கு காலதாமதம் ஏற்படும். உள்நாட்டில் தூரப் பிரதேசங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. அக்காலப் பகுதியில் பயன்பாட்டிற்குத் தேவையான பாதுகாப்பு இருப்புகளைச் சேகரித்து வைத்திருத்தல் அவசியமாகும்.

## விசேட காலங்களின்போது உருவாகும் சந்தையின் கேள்வியினை நிறைவு செய்து கொள்ளல்

சில வகையான பண்டங்களுக்கு ஏற்படும் கேள்வியானது அவ்வக்காலங்களில் நிகழும் உற்சவங்கள் போன்ற சந்தர்ப்பங்களால் அதிகரிக்கலாம். உதாரணமாக பண்டிகைக் காலங்களில் ஆடை, அணிகள், உணவுப் பண்டங்கள் போன்றவற்றுக்கு அதிக கேள்வி ஏற்படும். அக்கால கட்டத்தில் ஏற்படும் கேள்வியை நிறைவு செய்வதற்கு இருப்பை மேலதிகமாகச் சேகரித்து வைத்திருப்பது அவசியமானதாகும்.

## கிரயத்தைக் கட்டுப்படுத்தல்

கிரயத்தைக் கட்டப்படுத்துவதற்குப் பொருத்தமான களஞ்சியப்படுத்தல் முக்கியமானதாகும். சிறந்த இருப்புக் கட்டுப்பாட்டினால் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், வணிகர்கள் வாடிக்கையாளரின் தேவைகளை உரிய வேளைகளில் நிறைவு செய்து கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும். இருப்புக்கள் காலாவதியாகாது இருத்தல்,

அழிந்து போகாதிருத்தல் போன்றவற்றால் கிரயத்தைக் கட்டுப்படுத்துவது இலகுவானது.

களஞ்சியப்படுத்தலின் முக்கியத்துவம் வணிகர்களுக்கு எவ்வாறு இன்றியமையாததாக அமைகின்றது என்பதனை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இதனால் முறையான களஞ்சியப்படுத்தல் செயற்பாட்டைச் செயற்படுத்துவது இன்றியமையாததாகும்.

## வணிகரொருவர் களஞ்சியப்படுத்தலின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்

### இருப்புக்கள் பற்றிய அறிக்கையைப் பேணுதல்

இருப்புக்கள் தொடர்பாகச் சரியான முறையில் அறிக்கைப்படுத்தி வைப்பதன் மூலம் இருப்புக்கள் பற்றிய சரியான தகவல்களை அறிந்துகொள்ள முடியும். இதற்காக அதிகமான வணிகர்கள் களஞ்சியப் பேரேட்டைப் பேணுகின்றனர். இக்களஞ்சியப் பேரேட்டில் களஞ்சியத்திற்குக் கிடைத்த பொருட்கள், அவற்றிலிருந்து விநியோகிக்கப்பட்ட பொருட்கள் மீதி இருப்புக்கள் போன்ற தகவல்கள் உள்ளடங்கி இருக்கும். களஞ்சியசாலையில் காணப்படும் ஒவ்வொரு பொருட்களினதும் விபரங்களைப் பெறுவதை இலகுபடுத்துவதற்கு பந்தாய அட்டை (Bin Card) பயன்படுத்தப்படும். பந்தாய அட்டை ஒவ்வொரு வகைப் பொருட்களுக்கும் அருகே காட்சிக்கு வைக்கப்படும். இவ்வட்டையின் மூலம் தற்போது களஞ்சியசாலையில் எஞ்சியிருக்கும் இருப்புக்கள் எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள முடியும். பந்தாய அட்டையின் மாதிரி கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| பண்டத்தின்பெயர் :- அரிசி | | உச்ச மட்டம் : ................. | |
| பொருட்களின் குறியீட்டு இலக்கம் :- ............ | | இழிவு மட்டம் : ................. | |
| பந்தாய அட்டையின் இல :- 01 | | மறுகட்டளை மட்டம் : ................. | |
| களஞ்சிய பேரேட்டின் இலக்கம் :- | | மறுகட்டளைத் தொகை : ........... | |
| **திகதி** | **பெறுவனவு (அலகு)** | **வழங்கல் அலகு** | **இருப்பு அலகு** |
| 2008.01.10 | அரசிமூட்டை 150 | - | 150 |
| 2008.01.11 | - | 100 | 50 |
| 2008.01.12 | 75 | 50 | 75 |
| 2008.01.14 | 100 | - | 175 |
| 2008.01.15 | 50 | 100 | 125 |

## பண்டங்களின் தன்மைக்கேற்ப பண்டங்களை முறையாக அடுக்கி வைத்தல்

களஞ்சியசாலையில் உள்ள ஒவ்வொரு பண்டங்களும் தன்மையில் வேறுபட்டதாக இருக்கும். சில வகையானவை விரைவாகப் பழுதுபடக் கூடியவையாக இருக்கும். அவை விரைவாக எடுக்கக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். மேலும் சிலவகையான பண்டங்களை உணவுப் பண்டங்களிலிருந்து வேறுபடுத்தி வைக்க வேண்டும். பண்டங்களின் தன்மைக்கேற்ப விரைவாக பெற்றுக் கொள்ளக் கூடியவாறு முறையாக வைக்கப்பட வேண்டும்.

## பண்டங்களைக் களஞ்சியசாலைக்கு முறையாகப் பெற்றுக் கொள்ளலும் அவற்றை வழங்குதலும்

உற்பத்தி நடவடிக்கைகளுக்காகவோ அல்லது சந்தைக்கு விநியோகிப்பதற் காகவோ உரியகாலத்தில் கட்டளைகள் இடுதல் வேண்டும். அவ்வாறு களஞ்சியசாலைக்குக் கிடைத்த பண்டங்களை உரிய ஆவணங்களோடு பரிசீலனை செய்து பொறுப்பேற்றுக் கொள்வது முக்கியமானதாகும். களஞ்சியசாலையில் இருந்து பண்டங்களை விநியோகிப்பதும் வெளித்தரப்பினர் மூலம் கிடைக்கும் கட்டளைகளைப் பரிசீலனை செய்வதும் ஒழுங்கு முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் காரணமாகப் பந்தாய அட்டை(Bin Card) முக்கியம் பெறுகிறது.

## பொருத்தமான பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடித்தல்

வணிகர் தமது களஞ்சியசாலையில் வைக்கப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது தொடர்பாகவும் முக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். உதாரணமாக பீடைகளிலிருந்து பாதுகாத்தல், பொருட்கள் அழிவுறுதல், காலாவதியாதல், கள்வர் பகைவர்களிலிருந்து பாதுகாத்தல் தொடர்பாகப் பொருத்த மான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வணிகரொருவர் மேற்காட்டப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துவதுடன் முறையான களஞ்சியப்படுத்லொன்றினை மேற்கொள்வதினூடாகத் தமது நோக்கத்தை திறனுடையதாக நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

## முறையான களஞ்சியப்படுத்தல் முறையொன்று பேணப்படாதுவிடின் பின்வரும் பாதக விளைவுகளுக்கு வணிகர்கள் முகம் கொடுக்க நேரிடும்.

- வணிக நடவடிக்கைள் தடைப்படும். உதாரணமாக போதுமான மூலப்பொருட்களின் கையிருப்புக்கள் இல்லாதிருப்பின் வணிக நடவடிக்கைகள் தடைப்படும்.

- வாடிக்கையாளர்களின் விருப்பங்களை உரிய நேரங்களில் நிறைவேற்றுவதற்கு முடியாது போகும். இதனால் வாடிக்கையாளர் அதிருப்தி அடைவர்.
- வணிக நிறுவனத்தின் மீது வைத்திருந்த நன்மதிப்புக் குறைந்து விடும்.
- தேவையற்ற செலவுகளைப் பொறுப்பேற்க வேண்டிவரும். கையிருப்பு நடவடிக்கைகளை முறையாக நடைமுறைப்படுத்தாதுவிடின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக அவசர கட்டளைகள் பிறப்பிக்க வேண்டிவரும். இவ்வாறு நடைபெறும்பொழுது தேவையற்ற செலவுகளைப் பொறுப்பேற்க-வேண்டி வருவதனால் பண்டங்களுக்குக் கிடைக்கின்ற இலாபம் குறை-வடையும்.
- தேவைக்கதிகமாக இருப்புக்களை பேணுவதால் வணிகத்திற்கு நட்டமேற் படலாம்

### செயற்பாடு 07

01. களஞ்சியப்படுத்தலினால் வணிகர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங் கள் பற்றிக் குறிப்பிடுக.
02. பின்வரும் பண்டங்களின் வகைகளை மிகவும் பொருத்தமான முறையில் களஞ்சியப்படுத்தப்படுவதற்குப் பொருத்தமான முறைகளைப் பெயரிட்டு அவ்வாறு களஞ்சியப்படுத்துவதனால் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்களைப் பட்டியல்படுத்துங்கள்.
    1) கனியஎண்ணெய்
    2) பசளை
    3) உணவுப் பொருட்கள்
    4) நெல் , சோளம் போன்ற தானிய வகை
    5) மருந்துப் பொருட்கள்
    6) மீன் இறைச்சி
03. உமது பிரதேசத்தில் உற்பத்தியும், வியாபார நிலையங்களின் களஞ்சிய செயற்பாடுகளிலுள்ள பண்புகளை பரிசீலனை செய்து அறிக்கை தயாரிக்கவும். (மாணவர்கள் குழுக்களாக ஈடுபடுதல் நன்று)